190

உ

ஸ்ரீ ராமஜயம்.

இங்கிலீஷ் 1924வரு

ரக்தாக்ஷி வருஷத்தில் நேர்ந்த

பலவூர் வெள்ளச்சேத
பரிதாப சிந்து.

894.811
2467

இஃது

காவாளமேடு

ராஜபார்ட்டு

அ. ஆதிமூலநயினர் அவர்களால்

இயற்றியது.

வஸந்தா பிரஸ்,

மாயவரம்.

1924

இதன் விலை] [அணா 1.

உ

ஸ்ரீராமஜயம்.

பலவூர் வெள்ளச்சேத

பரிதாப சிந்து.

காப்பு வெண்பா.

அத்திமுகவன் அறுமுகவன் சகோதரனே
பத்தியுடன் கெங்கை பாருலகை—வந்தழித்த
சுத்தகவிபாட சுருதிவரந்தருவாய்
சித்திவிநாயகன் காப்பு.

விதிவசம் கேளீர் கெங்கையால் குடிகெட்ட
சதிமோசம்பாரீர்.

ஆயிரத்துலாயிறத் திருபத்திநாலினில்
ஆனதுலை இரு பத்தோறுந்தேதியில்
கொங்குவங்காளம் குடாக்கடல் முதலாக
கோலாகலமான காற்றுமழையாலே
கிளம்பினாள் கெங்கை குடிகெடுப்பதற்கு
கொண்டாளே சிந்தை.

ஈரோடுபவானி எங்குமே ஒன்றாகி
எகிக்கோயம் புத்தூர் ஜில்லாவைபோக்கியே
சீரான ஸ்ரீரங்கம் மதகை உடைத்துமே
சிறியேகொள்ளிடம் வழியாக வந்துமே
யென்னென்ன செய்தாள் கொடுமையை
எவ்வாறு புகல்வாம்.

அணையென்றுபாருமல் அடியோடுபெயர்த்தது
அரசாங்கத்தாற்கண்டு ஆனமட்டுந்தடுக்க
தடுக்கவே சினங்கொண்டு தாண்டிக்குதித்தது
தாண்டிக்குதிக்கையில் தரணிதனிலுள்ளோர்
தலைவிதிகோலம் என்று
தான் [illegible]

நாத்துநடவுகள் நாசமாய்ப்போச்சுது
நலமான பயிர்களை வேரோடு பிடுங்கிற்று
கூறைவீடுகளை குப்புறத்தள்ளிற்று
குதிர்நெல்விரைகளை தொள்ளையுமிட்டதே
ஆகாகா மோசம் இதுவென்ன
ஆறிட்டசாபம்

ஆவணக் காப்பக

மைந்தர்மனைவிமக்கள் மார்போடணைத்துமே
மண்முட்டிலேற்றவும் மலரயன் வகுத்தானோ
ஆடுமாடுகளும் அழுந்தியேபோகுதே
அய்யோ வைக்கல்போர் தெப்பம்போலோடுதே

இப்படிக்கொள்ளை உலகினில் இதுவென்ன சள்ளை

மண்முட்டிலிருந்தவர் பசியினால்வாடிட
மதலைப்பிள்ளைகளெல்லாம் உயிர்பிச்சைகேட்டிட
நாளுக்குநாள்ஜலம் மேடாகப்பெருகிட
நாடிசீப்புலியூரில் தேடிஉடப்பெடுக்க

வக்காறமாறி உடைப்பது வருகுது சீறி

மூடிகண்டனூறது முழுகியேபோச்சுது
மேடுகள்பார்த்துமே ஓடியொழியலாச்சு
வல்லம்பரச்சேரி வலசையாயோடிற்று
வாகானமணமேடு வந்துசேரலாச்சு

இன்னமுங்கேளும் பாப்பாகுடி உடைப்பதுநாளும்

ருயசூரியம்பேட்டை நாசமாய்போனது
நஞ்சை நிலமெல்லாம் புஞ்சையோடொத்தது
இலுப்பப்பட்டுஜனம் ஏரினார்கோவில்மேல்
வக்காறமாறியார் வகைதப்பிநிற்கிறார்

ஓடவேஎண்ணி நாளுக்குநாள் வெள்ளம் கூடவே தண்ணீர்

மணமேடுரோட்டெல்லாம் மாரளவுஜலம்
மண்ணியார்பெருகியே அன்னீதம்செய்தது
பாக்கம்பறச்சேரி பஞ்சுபோல் பறந்தது
கோழிக்குஞ்சுகளெல்லாம் கூறைமேல்கூவிட

இப்படிஓட பழவாறு தண்ணீரும் எகிறியேகூட

மண்ணியார்பழவாறும் ஒன்றாகக்கூடியே
மல்லுக்கழைத்தது காவாளமேட்டையும்
அல்லல்படுத்தவே யெல்லாருமொருவீட்டில்
கண்ணில்ஜலம்விட்டு கதறி அழுதாரே

இப்படி துன்பம் பழவாத்தில் நட்டிட்ட கம்பம்

வாகானவறகடை பிள்ளைமாரெல்லோரும்
வருந்தோடைகுருவையை திருத்தியேநட்டார்கள்
சப்பா விறைகளை சரிவரவிட்டார்கள்
சாஸ்திபறையனாலே ஆஸ்தியைசிலவிட்டார்

இன்னமும்பாராய் பறச்சேரி வீடெல்லாம்ஆறாய்

தர்மகுணமுள்ள தாழஞ்சேரிபிள்ளை
சம்பாகுருவையை ஜாஸ்தியாய்நட்டார்கள்
கள்ளனைப்போல்வந்து வெள்ளமழிக்கவும்
பள்ளன்பறையன்வீடு கொள்ளையாய்போகவும்

அய்யய்யோமோசம் அன்பதுவீடு அடியேடுோசு

கொண்டல்கடுவங்குடி குதித்துமேதாண்டுது
தருக்கணைபோட்டு மறித்துமேபார்த்தார்கள்
அத்துகள்மீறியே கொத்தனூர்சேர்ந்ததும்
பண்ணித்தலமோடு பஞ்சாய்ப்பறந்தது

இப்படிவெள்ளம் நாளுக்குநாள்ஜனம் கலங்குதே உள்ளம்

மேலமருந்தூரார் மேவினார் மாயூரம்
மேலானூரனைவரும் புலம்பித்தவிக்கவே
புளியங்குடியதை பெயர்க்குதுஅடியோடு
கன்னியாகுடிபறை காலியாய்போகவே

மந்தையாய்கூட ஜனங்களெல்லாம் மாயூரம்ஓட

துறையூரிலிருந்தவர் தொந்தரைபட்டார்கள்
தோணியிலேறி ஆழி போய்சேர்ந்தார்கள்
பனமங்கலத்தாரும் பஞ்சாய் பறந்தார்கள்
பண்பாக தோணியி லேறிஅமர்ந்தார்கள்

யேறவே தோணி சீர்காழியிலிரங்கினார் ஊணி.

நடராசபுரமது திடலாகபோனதே
நாகலிங்கம் பிள்ளை நாட்டினார் குடிகளை
தேனூர் வடவஞ்சாரு திருக்கடாவலும்
தலைநாயர் திட்டின் மேல் தாவியே யேறினார்

யேறினார் பாரும் அக்கம்பக்கமுள்ள ஆயிரம் பேரும்

வடரெங்கம் உடைப்பது வாறிக்கொண்டோடிற்று
வாகாய் ரெங்கநாதர் கோவில் குளம் போலாச்சு
அனுமாரின் கோவிலும் அடியோடு விழுந்தது
அய்யங்கார் வீடெல்லாம் பொய்யாக போச்சுது

அய்யய்யோ தேரும் ஆறுமயில் தூரம் போகுதே பாரும்

மூலவிக்கிரகங்கள் முழுகியே போச்சுது
முப்பது ஆள்கூடி கைப்பிடியாய் தூக்கி
சாலையில்கொண்டுபோய் சாத்தியேவைத்தார்கள்
ஆவிலைபள்ளிபோய் சாலையில்ஒண்டியாய்

ஒடுதுபாராய் ஒண்ணரைமயில்தூறம் உடைப்பது நேராய்

ஆறுநேரான ஊரானதிலையோ
அன்பதுவீடுகள் அடியோடழிந்தது
மாடுகன்றுகளெல்லாம் மாண்டுமடிந்தது
மனிதர்கள்எல்லோரும் மாதலூர்ஒடினார்

இன்னமும்பாராய் இலத்தூரு உடைப்பதுநேராய்

இலத்தூருவீடெல்லாம் இடிவிழுந்ததுபோலாய்
மரத்தின்மேலேறினார் மனிதர்களெல்லோரும்
பிரசவமாதர்கள் புலம்பியழுகவும்
பிரம்பூர்மாதலூரு புறப்பட்டுபோகவும்

[illegible] சீர்காழியில் ஆனதுதண்ணீர்

பட்டிமோட்டாரெல்லாம் திட்டின்மேலேறினர்
பாலூரன்பீடுகை சாலையிலோடினர்
வாடியிலுள்ளவர் நாடினர்ரோட்டின்மேல்
பறச்சேரிவீடெல்லாம் பாழாகப்போச்சுது

இன்னமும் சேதம் உலகத்தில் இருக்குதனேகம்

கொண்டல்வள்ளுவகுடி குதித்துமேதாண்டுது
கோடங்குடியதை கொள்ளையடிக்குது
அத்தீருஉடப்பினல் அகிணிதென்னங்குடி
அவித்திபத்துகளெல்லாம் அடியோடுஒடுது

ஒடுதுபாரும் தோணிகொண்டு வருகிறார்பாரும்

ஓலையாம்புத்தூரு ஒட்டம்பிடிக்குது
ஒடவேபாதற குடியுமேசேருது
சேந்தங்குடியது சிந்தைகலங்குது
சீர்காழியில்வந்த சேட்டுசிலதர்மம்

செய்கிறார்பாரும் ஆயிரம்ஜனத்திற்கு அன்பாகசோறும்

வெழக்காடுவீடெல்லாம் கிழக்காலேஒடுது
வேட்டங்குடியது ஒட்டம்பிடிக்குது
புதுபட்டணம்தர்காசி புலம்பிஅழுகுது
போட்டார்கள்பறண்களை நீட்டாகமறுமீதில்

இப்படித்தானே இறைவனிட்ட கட்டளைதானே

சீர்காழிதாலூகா திருமுல்லைவாசலும்
பள்ளிவாசலோடு பதினைந்துவீடுகள்
கடலோடுகடலதாய் காலியாய்போனது
கண்ணல்ஜலம்விட்டு கதறியழுதாரும்

இதுவென்னவெள்ளம் ஏழைகள்வயிற்றினில் விழுந்ததேபள்ளம்.

காணவேணும் காணவேணு மேன்ற மெட்டு.

கடலங்குடி திருமேனியார்கோவில் எங்கும்
காணக்கண்கள்கூசுவெள்ளம்பாவி ஆற்றில்
வந்த வெள்ளம் மூன்னவர்கள் கண்டதில்லை என்றுறையக்
குறைந்தார்—மனங்—கறைந்தார்.

மணமோடு ராதானூரும்பூர வெள்ளம்
மீசுரமாய் சீறி நொடி யேற ஜனம்
தத்திதடுமாறி எங்கும் மெத்தவும் மனங்கலங்கி
புறண்டார்—கெலி—அறண்டார்.

போலீஸ்ஸ்டேஷன் வெள்ளமது மூழ்க அந்த
புத்தமங்கலம் கொள்ளையாய்ப்போக தங்கள்
புத்திரர் பெண்டுபிள்ளையை பத்திரமாய் காப்பதற்கு
போனார்—உயி—ரானார்.

காருகுடி மிருசு சின்னையாபிள்ளை பலரை
காத்து ரக்ஷிக்க எற்றார் தொல்லை எங்கும்
எளியாரின் சேரிலோடி அமுது படியும் போட்டார்
சீறாய்—ஈசா—பாராய்

நொண்டி சிந்து.

அவனியில் புலவர்களே-உங்களடி இணைக்கமலநான் சிரமேற்கொண்டேன்-கவலையைநீக்கிக்கொண்டேன்-இனிமேல்-காசினியில் வெள்ளம் வந்த விபரம் சொல்வேன்-நிகழும் ரக்தாக்ஷிதனில்- அதில்நேர்ந்த ஆடி மாதம் ஆறாந்தேதியிலே புகழுஞ்சோமவாரமா-மதில் பூர்த்தியாய் வெள்ளம்வந்த விபரஞ்சொல்வேன்-கொங்கு வங்காளமெல்லாம் - மழைகள் பெய்து-நொங்கு நுரையுமாக வெள்ளம் பெருகி-மைசூர் அணை புரண்டு-வருவதால்-மார்க்கமுடன் பவானி யார்கூடி-அகண்ட காவேரி வந்து-ஸ்ரீரெங்கம்-கோவில் வலமாக வந்து நாசமும் செய்ய-கொள்ளடம் காவேரியாய் உடைப்பெடுத்து-பட்டகஷ்டம் வெகுபேர்கள் மெத்தவுமுண்டாம் ஸ்ரீரெங்கம் பாலமுடைந்து-ஜலம்பெருகி-நடுத்திட்டு நாயகமழிந்ததுவாம்-அழிந்தவிபரம்சொல்ல-என்னொருநாவால்-ஆகாதுமனக்குறை போகாது-சீப்பிலியூர் உடைப்பதனால்-முடிகண்டனூர்-அன்பது வேலி மண்மேடானதுவே-ஆறு நேரானதினால் மணல்களெல்லாம்-அப்படியே வந்து சாய்ந்ததுவே-பாய்ச்சல் வாய்க்கால்களெல்லாம்-மண்மேடாக-பறப்பி இருக்கிறது பாருலகில்-பயிரிடமுடியாதாம்-மிராசுதார்கள்-பார்த்து மனங்கலங்கி யேங்குகுறார்-அகவிலைஏறினதால் -ஏழை ஜனம்-அல்லோலப்பட்டு சீர்காழி செல்ல-திருநாராயணபிள்ளை செய்ததர்மம்-தோணிமேலேறி வந்த- ஏழைகளில்-ஆயிரம் பேர்களுக்கு-அமுதளித்து-அன்னம் வடித்து போட்டுஆதரித்தார்-இன்னும் வெகு பேர்கள்-சீர்காழிதனில் ஏழைகளுக்கு அன்ன-தானமுஞ் செய்ய-சாமிநாதசெட்டியார்-தோணிகொண்டு சகலரையும்-மழைத்துவந்தனரும் - தொண்டர்களுடன்கூடி - அங்கங்கேயோடி- சோர்ந்துகளைத்தவருக்கமுதளித்தார்-எல்லாம் சிவன் செயலே-ஆதிமூலம்-இசைத்ததில் பிழையது பொருத்திடுவீர். (தந்தின)

கும்மி.

சப்த மேகங்களு மொன்றாகக் கூடியே
ஜல வருஷம் பொழிந்ததினால்
கெங்கை பவானியுடன்கூடி மைசூர்
அணைபுறண்டதை பாருங்கடி. 1
யானையைப்புறட்டி வந்ததுவாம்
அகண்டகாவேரியில் வந்து சேர்ந்ததுவாம்
யெண்பது டண்ணி[illegible] தேக்குமரத்தையும்
யெப்படியோ கொண்டுவந்ததுவாம். 2
காவேரி உடைப்பு மெத்த பெரியதாம்
கண்ணாலே பார்க்க முடியாதாம்
திருச்சினாப்பள்ளி தெருக்களெல்லாம் ஜலம்
இறண்டு வாரதைப் பாருங்கடி. 3
வீடுகளெல்லாமிடிந்து விழுந்துதாம்
வேணபொருள்களும் சேதமாச்சு
யாராலும் சொல்லமுடியாதே இந்த
அன்னீத வெள்ளத்தின் சேதி தன்னை. 4
பாதகம் பாதகம் பார்க்க சகிக்காது
பாரமுள்ள பெரும் ஊர்களெல்லாம்
[illegible] பாரினில் மறைந்த
பெண்ணரசே. 5

இன்னமும் சொல்கிறேன் கண்ணே நீ கேளடி
இன்பமுள்ள பெரும் ஊர்களெல்லாம்
தென்பா யெனக்கு தெரிந்ததை சொல்கிறேன்
தேன் மொழியே கேளாய் உன்னிதமாய் 6

மாளாத தண்ணீரும் தான் வருக வழி
மாடாடு கன்றுடன் தான் விழிக்க
கூட்டுடன் கைலைக்கு போகிறோ மென்றுமே
கும்பலாய் பேசுறார் பாருங்கடி. 7

கொள்ளிட வெள்ளம் குமிழி எழும்பியே
கள்ளனைப்போல் றயில்பால முடைய
கண்ட ரயில்கள் கலங்கி தவிக்கவும்
காலவித்தியாசம் பாருங்கடி. 8

ஆனைதாண்டாபுறம் ஸ்டேஷனிலிருந்து
அணு அணுவாகப் பெயர்த்ததுபார்
கன்னியாகுடிக்குநேர் பாலம் விழுந்திட
கலங்கி நிற்குது பாருங்குடி 9

வைத்தீஸ்வரன்கோவில் வடபுறமாகவே
வண்மையுள்ள றயில் பாலமெல்லாம்
யேகமாய்ப் பாலம் மிடிந்து விழுந்திட
யெல்லா ரயில்களும் நின்றதுவே 10

கோமணுநத்தம் குமிறியெழும்பியே
கொப்பளித்து உப்பனுத்தில்விழ
பக்கென்றுகிளம்பி பனமங்கலம்நேர்
பாலமிடிந்ததைப் பாருங்கடி. 11

ஆணிக்காரன்சத்திரம் கீழ்புறமாகவே
கொள்ளடம்ரெண்டு பிரிவாச்சு
இட்டுக்குள்ளிருந்த ஊர்களெல்லாம்
சேதமானதை பாருங்கடி. 12

நாதலபாடி நடுத்திட்டுவென்பார்கள்
நாயகமே குண்டலபாடியுமே
வீடுகளெல்லாமிடிந்துவிழுந்திட
வேணபொருள்களும் சேதமடி. 13.

இன்னுமனேக ஊர்களிருக்குது
எடுத்துரைக்கவும் நேரமில்லை
கெண்ணிதமான திருமுல்லைவாசலும் 14.
கேடு கெட்டதைப் பாருங்கடி.

மாயவரம்டவுன் கலெக்டரவர்கள்
மாயமாய்த்தோணி வரவழைத்து
ஆனைதாண்டாபுரம் நேவுதுறையாக 15.
அமைத்து வைத்ததைப் பாருங்கடி.

ஆபத்தினின்றிடும் ஊர்களுக்கெல்லாம்
ஆர்டர்பண்ணினார் தோணிகளை
தாமுமொருவராய் தோணியிலேறியே 16.
தர்மதுரையவர் போவதைப்பார்

எங்கெந்த ஊர்களும் தோணிகள் சென்றுமே
யேழைஜனங்களை யேற்றி கொண்டு
மந்தை மந்தையாக தோணியிலேற்றியே 17.
மாயவரம் வந்து சேர்த்தைப்பார்

வந்தவர்களெல்லாம் வயிற்றுப்பசியினால்
வாடியிருப்பதை பார்த்தவரும்
காருகுடிப்பிள்ளை கஞ்சிகொடுத்துமே 18.
களையைமாற்றினார் பாருங்கடி.

மண்முட்டிலிருந்த யேழைகளுக்கெல்லாம்
மணியார்டர்போலவே தோணியின்மேல்
அரிசிமூட்டையை யேற்றிக்கொண்டுபோய் 19.
ஆளுக்கொருபடி போடுரார்பார்.

அன்னீதமான வெள்ளத்தினால்வந்த
ஆபத்துகளெல்லம் தீர்த்தவராம்
மாயவரம்டவுன் கலெக்டர் துரையை 20.
மகிழ்ந்து கும்மியடியுங்கடி.

நாவலர்போற்றிடும் காவாளமேட்
ஆதிமூலநயினார் பாட
குற்றம்பொறுத்து கு த்திரகிப்பீர் 21.
குவலயத்தில் சர்களே.